
# நகுஷா பெற்ற சாபம்

## சாந்திப்பிரியா



பல்லாண்டுகளுக்கு முன்பு யாயாதி என்ற முனிவருடைய மகன் நகுஷா என்பவன் பூலோகத்தை ஆண்டு வந்தான். அவன் பாண்டவர்களுடைய முன்னோர்களில் ஒருவன். இஷ்டவாகு பரம்பரையை சார்ந்தவன். வேத பாடங்களை நன்கு கற்றறிந்து அதற்கேற்ப தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவன். அனைவராலும் விரும்பப்பப்பட்டவன். சற்றும் கர்வமே இன்றி ஆண்டு வந்தவனுடைய குரு வசிஷ்ட முனிவர் ஆவார். விருப்பு மற்றும் வெறுப்பை தவிர்த்து சிறப்பாக ஆண்டு வந்தவன் பல்வேறு யாகங்களையும் செய்தான். அவை அனைத்திலும் சிறந்து விளங்கியதே அவன் செய்த நூறு அஸ்வமேத யாகங்கள். அதனால் அவன் பல்வேறு சக்திகளைப் பெற்றிருந்தான்.

அவன் வாழ்ந்து கொண்டு காலத்தில் இந்திர லோகத்தில் ஒரு பிரச்சனை ஏற்பட்டது. பிராமண குலத்தைச் சார்ந்த விருத்திராசுரா என்ற அசுரனை கோழைத்தனமாக ஏமாற்றிக் கொன்ற பாவத்திற்காக இந்திரனுக்கு ஒரு குறிப்பிட்ட காலம் வரை தோஷம் தோன்றியது. அதில் இருந்து தப்புவதற்காக எவரிடமும் கூறாமல் இந்திரன் தன்

இருப்பிடத்தை விட்டு ஓடிச் சென்று வேறு ஒரு இடத்தில் ஒழிந்து கொள்ள இந்திர லோகப் பதவி காலியாகக் கிடந்தது. அனைவரும் இந்திரனைத் தேடி அலைந்தனர். ஆனால் அவர் எங்குமே கிடைக்கவில்லை. இந்திர லோகப் பதவியை காலியாக வைத்திருக்க முடியாது என்பதினால் தேவர்களும், முனிவர்களும் நன்கு கலந்தாலோசனை செய்த பின் பூமியை ஆண்டு வந்த நற்குணம் கொண்ட நகுஷாவிற்கு அந்தப் பதவியைக் கொடுத்து இந்திர லோகத்தில் முடி சூட்டினார்கள். முதலில் நற்பண்புகளுடன் ஆண்டு வந்த நகுஷாவின் செயல்பாடுகள் மெல்ல மெல்ல மாறத் துவங்கியது. தேவர்களுக்கு அதிபதியாகி விட்டோம் என்ற இறுமாப்பு அவனைப் பற்றிக் கொண்டது. அவனுடைய நல்ல குணங்கள் மறையத் துவங்கின. இப்படி இருக்கையில் தேவேந்திரனின் மனைவியின் அழகில் மயங்கிய நகுஷா அவளை தனக்கு உரிமையாக்கிக் கொள்ள முடிவு செய்து அவளை தன்னுடன் பூலோகத்திற்கு வந்துவிடுமாறு அழைத்தான். பதிவிரதையான அவள் அதற்கு ஒப்புக் கொள்ள மறுத்து தேவர்களின் குருவான பிரகஸ்பதியின் உதவியை நாடினாள். ஆனால் அதை அறிந்த நகுஷா பிரகஸ்பதியை பயமுறுத்த அவர் அவளுக்கு அறிவுறைக் கூற முடியாமல் ஒதுங்கிக் கொள்ள இந்திரன்  ஒளிந்து கொண்டு இருந்த இடத்தை கண்டு பிடிக்க பார்வதி தேவியின் துணையை வேண்டிப் பெற்று, அவர் ஒளிந்து கொண்டிருந்த இடத்துக்கு சென்று நகுஷாவிடம் இருந்து தன்னை காப்பாற்றிக் கொள்ள வழி கேட்டாள். தோஷ காலம் முடியாததினால் ஒளிந்து கொண்டு இருந்த இடத்தில் இருந்து வெளி வந்து அவரால் நகுஷாவை வெற்றி கொள்ள முடியாத நிலைமை இருந்தது. ஆகவே அவர் நகுஷாவிடம் இருந்து தப்பிக்க வேறு ஒரு உபாயத்தைக் கூறினார். நகுஷாவுக்கு இருந்த ஒரு சாபத்தைப் பற்றி ஏற்கனவே பிரகஸ்பதி அவளிடம் கூறி இருந்தார். அது இப்போது பயன்பட்டது.


அதன்படி நகுஷாவிடம் ஏழு முனிவர்களான சப்த ரிஷிகள் தூக்கி வரும் பல்லக்கில் அவன் ஏறி வந்தால் அவனுடன் செல்ல சம்மதிப்பேன் எனக் கூறுமாறும், அதில் அவன் சிக்கலில் அகப்பட்டுக் கொள்வான் எனவும் கூறி அனுப்பினார். அவளும் அதன்படி நகுஷாவிற்கு செய்தி அனுப்பினாள்.  விதி விளயாடத் துவங்கினால் எவர் என்ன செய்ய முடியும்? சப்தரிஷிகளை அவன் அழைத்து ஒரு பல்லக்கில் தன்னை ஏற்றிக் கொண்டு தேவலோகம் செல்லுமாறு ஆணையிட்டான். தேவேந்திரப் பதவியில் அவன் இருந்ததினால் அவன் வார்த்தையை யாராலும் தட்ட முடியாது. ஆகவே அவனிடம் பயந்து கொண்டு சப்தரிஷிகளும் வேறு வழி இன்றி ஒரு பல்லக்கைக் கொண்டு வந்து அதில் அவனை ஏற்றிக் கொண்டு இந்திர லோகத்திற்கு பயணம் ஆயினர். அந்த

முனிவர்களில் மிகவும் குட்டையானவர் அகத்திய முனிவர். மற்ற முனிவர்களோ அவரை விட உயரம் அதிகம். அவர்களுடைய வேகமான நடைக்கு அவரால் ஈடு கொடுக்க முடியாமல் இருந்ததினால் பல்லக்கு ஆடியது. பல்லக்கில் அமர்ந்து இருந்த நகுஷாவோ காமம் கொந்தளிக்க 'விரைவாகப் போ, விரைவாகப் போ' என்ற அர்த்தத்தில் சமிஸ்கிருதத்தில் 'சர்ப, சர்ப' எனக் கத்திக் கொண்டே இருக்க ஆடிய பல்லக்கில் இருந்தவனின் கால் அகத்திய முனிவருடைய தலையில் பட்டது. சர்ப என்றால் வேகமாக மற்றும் பாம்பு என்ற இரு பொருளும் உண்டு. தன்னைக் காலினால் உதைத்து அவமானப்படுத்தியதாக கருதிய அகஸ்திய முனிவர் கோபமுற்றார். அவனுக்கு சாபமிட்டார். 'சர்ப, சர்ப' என கூவிக் கொண்டு என்னை கால்களினால் உதைத்தாயே அதனால் அந்த வார்த்தையின் பெயரில் வரும் சர்பமாக நீ பூலோகத்தில் பிறந்து உன்னுடைய வருங்கால சந்ததியினர் மூலம் சாப விமோசனம் பெற வேண்டும். அப்பொழுது உன் மனதில் தோன்றும் மூன்று கேள்விகளுக்கு அவர்கள் சரியான பதில் கூறினால் மட்டுமே சாப விமோசனம் பெற முடியும்.

நகுஷா முனிவரிடம் எத்தனையோ மன்றாடியும் மன்னிப்புக் கேட்டும் அவர் சாபத்தை விலக்கிக் கொள்ள மறுத்து விட்டார். நகுஷா சாபம் பெற்று பூமியில் ஒரு பெரும் மலைப் பாம்பாக மாறி பல்லாயிரம் வருடங்களாக காட்டில் வாழ்ந்து வரலானான். இந்திரனும் அதற்குள் சாப விமோசனம் அடைந்து இந்திர லோகப் பதவியை மீட்டுக் கொண்டான். இந்திரனுடைய மனைவியின் கற்பும் பறி போகவில்லை. காலம் ஓடியது. மகாபாரத வீரர்களான பாண்டவர்கள் வனவாசத்தில் இருந்தனர். ஒரு நாள் பீமன் காட்டில் வேட்டையாடச் சென்ற பொழுது மலைப் பாம்பாக இருந்த நகுஷாவிம் மாட்டிக் கொண்டான். தன் வம்சாவளியான பாண்டவனான அவனைப் பிடித்துக் கொண்டால் மட்டுமே தனக்கு சாப விமோசனம் கிடைக்கும் எனத் தெரிந்த நகுஷா தன் கதையை பீமனுக்கு எடுத்துக் கூறினான். பேசும் மலைப் பாம்பைக் கண்டு பிரமித்துப் போய் பீமன் அதனிடம் இருந்து தப்புவிக்க முடியாமல் திணறிக் கொண்டு இருக்கையில் காட்டிற்குச் சென்ற பீமன் திரும்பவில்லையே என்ற கவலையில் அவனைத் தேடிக் கொண்டு அலைந்த தர்மர் அங்கு வந்து சேர்ந்தார். தன்னிடம் அகப்பட்டுக் கொண்டிருந்த பீமனை விடுவிக்க மூன்று கேள்விகளைக் கேட்டு அவற்றுக்கு பதிலை தருமாறு தருமரிடம் நகுஷா கேட்டதும், அதற்கு அவரும் சரியான பதிலைத் தர, நகுஷா தான் பிடித்திருந்த பீமனை விடுவித்ததும், உடனடியாக சாப விமோசனம் பெற்று தன் நாட்டிற்குத் திரும்பிச் சென்று மீண்டும் நல்லொழுக்கமாக ஆட்சியை நடத்தி வரலானான்.

# Nagusha cursed

## Santhipriya



Several thousand years back Nagusha, the son of Maharishi Yayati, ruled the universe. He belonged to Ishvagu race and predecessor to Pandava brothers. He was well versed in Vedas and followed the norms of Veda Shastras and remained impartial to his folks. He was therefore liked by the folks of his country. Maharishi Vashishta was his guru. He performed several Yagnas and the Ashvamedha Yagya performed by him was the best amongst others due to which he further gained several spiritual powers.

While he was ruling the earth, in Indra Log a crisis occurred. Lord Indira killed a Brahmin called Vrudrasura by deceit and in order to escape the punishment

accrued out of the sin, he ran away from Indira Log and hid himself far away from the eyes of devas with the result the Indira Log throne remained vacant without a King. Everyone became tired of searching Lord Indira who remained elusive. Since the Kingdom of Indira Log cannot remain vacant for a long without a King, the celestials after considering all factors approached King Nagusha to accept the leadership till Lord Indira was traced and Nagusha gladly accepted it. Nagusha continued to rule even Indira Log without bias treating everyone alike maintaining the decorum needed. The celestials felt happy that they had indeed made a good choice as he ruled satisfying everyone. However as the years passed, slowly his attitude began to change making him power drunk, arrogant and all good qualities possessed by him started slowly vanishing.

Under the changed circumstances, while Nagusha was walking through the palace, he happened to see the beautiful wife of Lord Indira and he instantly fell in love with her. He approached her to marry him and go to Bhoolog along with him. She being very virtuous lady and true to her husband she felt displeased with the proposal of Nagusha. No celestial would come forward to protect her as they were threatened by Nagusha. Therefore she approached Maharishi Brihaspati seeking a solution to escape from Nagusha, he too backed out on account of threat from Nagusha. Therefore she prayed to Goddess Parvathi and with her help she found out the place of Lord Indira's hide out and met him seeking solution to escape from Nagusha. Since Lord Indira could not come out of his hiding to fight with Nagusha because the period of punishment was yet to get over, he suggested another solution which Maharishi Brihaspati had earlier secretly told him about a curse Nagusha was carrying on his head. Accepting the

suggestion she sent the message to Nagusha asking him to come and meet her in a palanquin to be carried by Saptha Rishis. Without knowing the implication of her suggestion, Nagusha called Saptha rishis and ordered them to carry him in a palanquin to meet Lord Indira's wife. Nagusha had not realized that those men were powerful rishis holding great powers than the King. The sages had to carry out the orders of the King and carried him in a palanquin. Maharishi Agastya was a short man and the palanquin titled to one side while going and Nagusha's legs kicked Agastya by mistake as he was shouting 'Sarpa...Sarpa' meaning go faster....go faster. That was the last straw and enraged Sage Agastya was enraged by the appalling behaviour of the king, and cursed him 'may you become a Sarpa (serpent) as uttered by you.

Nagusha immediately sought pardon, but Sage Agasthia was not willing to take back his curse and toned it down by suggesting that his curse could be redeemed only by his successors provided they answer three questions which may arise in his mind. Instantly Nagusha became a huge serpent in Bhoolog and lived for several thousand years in the same form. Many years later, when the Pandava brothers came to the jungle where Nagusha was living as a serpent, Nagusha caught Bhima who was strolling there and narrated his ordeal. Bhima was astonished that a servant spoke like human and attempted to free himself from him, but could not succeed. Meanwhile, Yudhistara was looking for Bhima. When he learnt what had happened to him, Nagusha revealed about his curse to Yudhishthira and requested him to answer three of his questions to get relieved of his curse. As soon as Yudhistara successfully answered his questions, Nagusha was freed of his curse and went to heaven freeing Bhima too.